சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 27.04.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 57/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-11 |
| சாட்சியின் பெயர் | : | கோவிந்தராஜன் |
| தந்தை பெயர் | : | சேவுப்பிள்ளை |
| கிராமம் | : | அட்டமங்கலம் |
| தாலுக்கா | : | நன்னிலம் |
| தொழில் | : | சிறப்பு உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| வயது | : | 66 |

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1, 4 மற்றும் 6 எதிரிகள் ஆஜர். 3 ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கடந்த 2019 ஆம் ஆண்டு வலங்கைமான் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 11.07.2011 ஆம் தேதி நிலைய குற்ற எண். 275/2011 சட்டப்பிரிவுகள் 147, 148, 302 of IPC r/w 3(1)(r) SC/ST (PoA) Act-ன் கீழ் மானாந்தெரு, கடுவங்குடி கிராமத்தை சேர்ந்த தங்கவேல் மகன் 42 வயதுடைய இறந்து போன சாமிநாதன் என்பவரின் பிரேத்தை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தியும், மருத்துவ அதிகாரிகளுடன் உதவியாக இருந்தும், மருத்துவ பிரேத பரிசோதனைக்கு பின் மத ஆட்சாரபடி நல்லடக்கம் செய்ய இறந்தவரின் தம்பி முத்துகுமாரசாமி என்பவரிடம் சாட்சிகள் முன்னிலையில் பிரேதத்தை ஒப்படைத்தேன். அதன் பின்னர் நிலையம் வந்து நன்னிலம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் விபரம் சொன்னேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:** - இல்லை-

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.04.27 18:01:33 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.